பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 08 திங்கட்கிழமை 24.07.2023 கதிர் 255

# கறுப்பு ஜூலையில் உயிர் தப்பியவர்களின் கதைகளை கேட்டு உருகிய கனடா பிரதமர்

## மனதை நெகிழவைத்த பயங்கரங்கள் எனவும் வர்ணிப்பு



தமிழர்களுக்கு எதிராக அரச ஆதரவுடன் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஜூலை இனக்கலவரகளின் 40ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிர்தப்பிப்பின்னர் கனடாவில் தஞ்சமடைந்தவர்களை கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ரூட்டோ நேரில் சந்தித்து நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்.

கறுப்பு ஜூலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து அவர்களின் நினைவுகளைப் பகிர்ந்து துயரத்தில் பங்கெடுத்தது தொடர்பாகத் தனதுகீச்சக (ருவிட்டர்) பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

”மனதை நெகிழவைக்கும் காலை, கறுப்பு ஜூலையின் பயங்கரமான வன்முறைகளில் இருந்து உயிர் தப்பியவர்களின் கதைகளைச் செவிமடுத்தேன்” என கனடா பிரதமர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

''உங்கள் கதைகளை பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி. உங்கள் வலிமை, உங்களின் நம்பிக்கை, மீண்டெழும் திறன் ஆகியவற்றை ஒருபோதும் நான் மறக்கமாட்டேன்” எனவும் அவர் பதிவி;ட்டுள்ளார்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரியின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

கனேடிய பிரதமர் தலைமையிலான ஆட்சி ஏற்கனவே, இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று தீர்மானம் நிறைவேற் 2

# இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஆட்சியாளர்கள் கள்ளத்தனமாக, தகிடுதத்தம் பண்ணி ஒத்து வைத்துவிட்டது தொடர்பான வழக்குகளின் தீர்ப்புகள் விரைவில் வரவுள்ள நிலையில் அதனால் ஏற்படக்கூடிய பாதக நிலையில் இருந்து தப்புவதற்கான மாற்ற வழிகளை ஆட்சியாளர்கள் தேடிவருகின்றனர் என்று ஏற்கனவே இந்தப் பத்தியில் கூறியிருக்கின்றேன்.

தேர்தலை நடத்த நிதி இல்லை என்ற காரணத்தைக்காட்டியே தேர்தலை நிறுத்தினர் ஆட்சியாளர்கள். ஆனால், தேர்தலுக்கான நிதி இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை விடுவித்து தேர்தலை நடத்தும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இருப்பினும் நிதி அமைச்சர் என்ற வகையில் நிதியை விடுவிப்பதற்கான அனுமதி ஜனாதிபதியிடம் இருந்து கிடைக்கப்பெறவில்லை என்பதைக் காரணமாகக் காட்டி திறைசேரிச் 2

# மருதங்கேணியில் 162 கிலோ கஞ்சா சிக்கியது



மருதங்கனி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதங்கேணி கடற்பகுதியில் கடற்படையினர் நடத்திய தேடுதலில் நேற்று அதிகாலை 162 கிலோ கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

கடற் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய தேடுதல் நடத்தப்பட்டபோது இந்தக்கஞ்சா சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலையே இந்தியாவிலிருந்து 2

# இனப்படுகொலைக்கு நீதி வேண்டும்

## யாழ்ப்பாணத்திலும் நேற்று நினைவேந்தல்



ஈழத் தமிழர்கள் மீதான சிறிலங்கா அரசின் இனப்படுகொலைக்கு நீதிவேண்டும் என வலியுறுத்தி கறுப்பு ஜூலை நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக் கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் பொது நூலகத்திற்கு அருகாமையில் நேற்று மாலை இந்த நினைவேந்தல் அனுஷ்டிக் கப்பட்டது.

கறுப்புஜூலை நினைவேந்தல் பொதுச் சுடரினை மாவீரரின் தந்தையொருவர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து 2

# பணிப்பெண்ணாக இருந்த 17 வயதுச் சிறுமி உயிரிழப்பு

## விசாரணைகளைத் தொடங்கியது பொலிஸ்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் வீட்டில் பணிபுரிந்த சிறுமியொருவர் இன்றையதினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை முதலிகோவிலடியைச் சேர்ந்த கேதீஸ்வரன் தர்மிகா என்கிற 17 வயதான சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாக இந்தச் சிறுமி கல்வியங்காடு சட்டநாதர் கோவில் அருகே உள்ள குறித்த வீட்டில் தங்கி பணிப் பெண்ணாக இருந்துள்ளார்.

இந்நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் தங்கியிருந்த குடும்பத்தினர் நிகழ்வொன்றுக்கு 2

## கறுப்பு ஜூலையின் 40ஆவது ஆண்டையொட்டி கொழும்பில் நடந்த

# நினைவேந்தலிலும் பொலிஸ் அராஜகம் சுட்டிகளைக் கால்களால் மிதித்து அழிப்பு

## நிகழ்விடத்தில் கடும் பதற்றம்

**தமிழர்கள் மீது 1983இல் திட்டமிட்டு அரச ஆதரவுடன் சிங்களக் காடையர்களால் நடத்தப்பட்ட இனக்கலவரத்தில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களை நினைவுகூரும் வகையில் கொழும்பு பொரள்ளையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வைக் குழப்பி, நினைவேந்தல் சுட்டிகளை கால்களால் மிதித்து, உடைத்து அழித்து அட்டூழியம் செய்துள்ளனர் பொலிஸார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**



**பத்திரிகையாளர்கள் உட்படப் பலரும் பார்த்திருக்க இந்த அராஜகத்தில் பொலிஸார் ஈடுபட்டதுடன், நிகழ்வைக் குழப்ப முயன்றவர்களுக்குச் சாதகமாக, அமைதியை நிலைநாட்டுதல் என்ற பெயரில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை பலவந்தமாக அங்கிருந்து அகற்றினர் பொலிஸார்.**

**கறுப்புஜூலையின் நாற்பதாவது நினைவு நாள் நேற்று நாடு முழுவதும் கடைப்** 2

# அழுத்தம் தரும் தரப்பாக மட்டுமே இந்தியா தொடர்ந்து இருக்கக்கூடாது

## உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்த ஆவண செய்வேண்டும்
## ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வலியுறுத்து

இலங்கைத்தமிழர்களின் பிரச்சினையில் தொடர்ந்தும் அழுத்தம்கொடுக்கும்தரப்பாக மட்டும் இல்லாமல், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தரப்பு என்ற அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஆவணசெய்ய வேண்டும்.


இவ்வாறு வலியுறுத்தியுள்ளது ஈபிஆர்எல்எவ்கட்சி. இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிஅரசமைப்பின்13ஆவது திருத்தம்தொடர்பில்தெரிவித்த கருத்துக்களை வரவேற்று கட்சித் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

இந்தியப் பிரதமரினால் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளையும் இங்கையின் மீதான இந்தியாவின் எதிர்பார்ப்பினையும் நம்பிக்கையையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரவேற்றுள்ள அதேவேளை, தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் தரப்பாக இல்லாமல், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தரப்பு என்ற அடிப்படையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவண செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி ஒரு வருடத்திற்குப் பின்னர் ஜூலை 20 முதல்முறையாக இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திரமோடியின் அழைப்பின்பேரில் டெல்லி சென்றிருந்தார். டெல்லியில் இரு தரப்பு பேச்சுகளும் நடைபெற்றன. ரணில் விக்கிரசிங்க டெல்லி செல்வதற்கு முன்பாக, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சார்ந்த ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த்தேசியக்கட்சி, ஜனநாயகப் போராளிகள் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கையெழுத்திட்டு ஒரு கடிதத்தை டெல்லிக்கு அனுப்பியிருந்தனர்.

அதில் முக்கியமாக 2

# குடத்தனையில் ஆயுதங்கள் மீட்பு



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இன்றையதினம் பெருமளவில் வெடிபொருட்கள் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. 2

# யாழ். பல்கலையிலும் நேற்று நினைவேந்தல்





யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று கறுப்புஜூலை நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் அருகே அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான கொடிக்கம்பத்தில் மாணவர்களால் கறுப்புகொடி யேற்றப்பட்டு அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்திற்கு மாணவர்களால் ஈகச்சுடரேற்றப்பட்டதோடு மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழிர்களுக்கு இழைக்கபட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

நினைவேந்தலில் பல்கலைக்கழக 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு நிதியை விடுவிக்கவில்லை. இதனால் வேறு வழியின்றி தேர்தல் காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டது.

ஆனால், இந்த விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்பு பாதகமாக வந்தால் தேர்தலை உடன் நடத்தவேண்டியிருக்கும் என்று கருதிய அரசு, அதற்கு முன்பாக தேர்தல் வேட்புமனுக்களை இல்லாது ஒழிப்பதற்கான சட்டத் திருத்தத்தை தனிநபர் வரைபாக நாடாளுமன்றத்தில் முன்வைத்தது. வேட்புமனுக்களை நிராகரித்துவிட்டால், நீதிமன்றத் தீர்ப்பு பாதகமாகவந்தாலும்மீண்டும் தேர்தலுக்கான வேட்புமனுக் கோருவதுதேர்தல்திகதியைத் தீர்மானிப்பது என்று சில மாதங்களைக் கடத்தமுடியும் என்றுதிட்டமிடப்பட்டது. அது கடும் விமர்சனங்களை எதிர்கொண்டதுடன், அந்த வரைபை நிறைவேற்றுவதானால் மக்களின் கருத்துஅறியப்படவேண்டும் என்று சட்ட மா அதிபர் அறிவித்திருந்தார். அது மட்டுமல்லாமல் அந்தச் சட்ட வரைபை எதிர்த்து தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல்செய்யப்பட்டது. இனி இந்த வழக்கின் தீர்ப்பு வரும் வரையில்ஆட்சியாளர்களால் மேற்கொண்டு எந்த நகர்வையும் மேற்கொள்ள முடியாது.

இந்த நிலையில்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவியிலிருந் து விலக்கப்பட்ட உறுப்பினர்கள் எடுத்த சில முடிவுகளின் மூலம் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறினார்களாகஎனறுஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பது என்று ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தெரிவுக் குழு மூலம் ஆணைக்குழுவின் தேர்தல் தொடர்பான முடிவுகளைச் சவாலுக்கு உட்படுத்துவதன் ஊடாக தேர்தல் அறிவிப்பு தவறானதென நிரூபித்து அதன்மூலம்அறிவிக்கப்பட்ட தேர்தலும் தவறானதெனக் காட்டி அதனை நிறுத்த ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர்.

அரசின் இந்த யோசனையை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கட்சித்தலைவர்கள்கூட்டத்தில் கடுமையாக எதிர்த்தார். இது முற்றிலும் அறத்துக்கு எதிரானது என்று அவர் சாடினார். இந்த ஆட்சி புதிய தேர்தல்கள் ஆணைக்குழு மீதும் நீதித்துறையின் மீதும் மறைமுகமாக அழுத்தங்களைக் கொடுப்பதற்காகத்தான் ஆட்சியாளர்கள் இப்படிநடந்துகொள்கிறார்கள் என்று அவர் கண்டித்தார். பின்னர் இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். வழக்கம் போலவே அதனைப் பொருட்படுத்தாமல் நாடாளுமன்றத் தெரிவுக் -குழுவுக்கான -முன்மொழிவை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது ஆட்சி.

இது விடயத்தில் சாம, தான, தண்ட, பேதம் என நால்வகை உத்திகளையும் பயன்படுத்துவதில்இந்தஆட்சி குறியாகவே இருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## மருதங்கேணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 162 கிலோ 400 கிராம் எடைகொண்டகேரளாகஞ்சா கொண்டுவரப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாகச் சந்தேகநபர் ஒருவர் கைது கடல்படையினரால் கைது செய்யப்பட்டார்.

கஞ்சாவினை கொண்டு வருவதற்காக பயன்படுத்தியப்பட்டதாக நம்பப்படும் இயந்திரப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டு மருதங்கனி பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபரையும் சான்றுப் பொருள்களையும் இன்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## கறுப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றியது. இலங்கை அயலுறவுத் துறை அமைச்சு இந்தத் தீர்மானத்தைக் கடுமையாகக் கண்டித்தது. இலங்கையில்நல்லிணக்கச்செயற்பாடுகளை இது பாதிக்கும் என்றும்அமைச்சர் அலி சப்ரி அறிக்கை விட்டார்.

இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாத கடும்போக்குவாதிகள் மத்தியில் கடும் பதற்றத்தை ஏற்படுத்திய கனடாவின் தீர்மானத்தை எதிர்த்து அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். கனடாவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில்தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று சிங்களக் கடும் போக்குவாதியான முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர வலியுறுத்தியிருந்தார்.

## இனப்படு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனையவர்களும் சுடரேற்றி அஞ்சலி செய்தனர்.

நினைவேந்தல் பதாகையில் 1983 கறுப்பு ஜூலை தமிழினப்படுகொலையானது சிறிலங்காஆட்சியாளர்களால் திட்டமிட்டுஅரங்கேற்றப்பட்டது என்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையில்படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும் நாடு முழுவதும் படுகொலை செய்யப்பட்டதமிழர்களையும் நினைவுகூறுகிறோம் எனவும் 1948 முதல் இன்று வரை நடைபெற்ற நடைபெறுகின்ற இன அழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளரும்நாடாளுமன்றஉறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்மற்றும்கட்சியின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி காண்டீபன் உட்பட கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பணிப்பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிட்டுத்திரும்பிவந்து பார்க்கையில் குறித்த சிறுமி தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சிறுமியைப் பார்க்க யாரும் வரக்கூடாது என்று தெரிவித்த வீட்டு உரிமையாளர் மாதத்தில் ஒரு முறை மாத்திரமே பெற்றோருடன் கதைக்கமுடியுமென கட்டுப்பாடு விதித்திருந்ததால் மன அழுத்தத்துக்கு உள்ளாகிச் சிறுமி உயிரிழந்தார் என்று உறவினர்கள் இப்போது குற்றஞ்சாட்டுகின்றனர்.

சடலத்தைபார்வையிட்ட தீடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

## நினைவேந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்டது. இதையொட்டி, கலவரங்கள் தொடங்கிய இடமானகொழும்புபொரளை கனத்தை மயா னத்திற்கு முன்பாக நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இனக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும்பொதுஅமைப்புக்களும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

பிற்பகல் 3 மணிக்கு



பொரள்ளையில் பொலிஸார் காலால் சுட்டிகளை மிதித்து உடை ப்பதை படத்தில் காணலாம்

நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த இடத்தில் பொலிஸார், கலகமடக்கும் பிரிவினர், இராணுவத்தினர் எனப் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டிருன்தனர்.

கனத்தை மயான சுற்றுவட்டத்தில் பெருமளவு பொலிஸ் வாகனங்களும் நிறுத்தப்பட்டிருந்தன. வீதியின் இருமருங்கிலும்பொலிஸாரும் இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வளவு பாதுகாப்புக்கும் மத்தியிலும், கறுப்புஜூலை நாற்பதாவது நினைவேந்தல் தொடங்கிய சில நிமிடங்களில் அந்தப் பகுதிக்கு வந்த ஒரு கும்பல் நிகழ்வில் கலந்துகொண்டவர்களுடன் வாய்த்தர்க்கத்தில்ஈடுபட்டுதகறாறுசெய்தது. சிங்கள, பௌத்த பேரினவாத கருத்துக்களை தெரிவித்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்த வர்களுடன் முரண்பட்டனர். நினைவேந்தல் செய்யக்கூடாது என்றனர்.

புலிகளின் ஆதரவாளர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி உதவியுடன் செயற்படுபவர்களே நினைவேந்தலைச் செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டிய அந்த் கும்பல், நிழ்வை நடத்தியவர்களுடனும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இப்படிக்குழப்பம்விளைவித்துக் கொண்டிருந்தவர்களைக் கட்டுப்படுத்தி, அவ்களை அங்கிருந்து அப்புறப்படுத்தாது வளாவிருந்ததனர் பொலிஸார். நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மிக அமைதியாக இருந்தபோதும்குழப்பக்காரக் கும்பல் அத்துமீறுவதைக் கட்டுப்படுத்த பொலிஸார் பெரிதாகஎந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை.

நிகழ்வைக் குழப்பும் விதத்தில் முரண்பட்டவர்களை அங்கிருந்து அப்புறப் படுத்துவதற்குப் பதில், அதனைச்சாக்காகவைத்துஅமைதியை நிலைநாட்டுவது என்ற பெரயில் பொலிஸார் கறுப்புஜூலை நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களை பின்னோக்கி தள்ள முயன்றனர் இதன்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட சட்டத்தரணிசிறிநாத்பெரேரா உட்படச்சிலர் நிலத்தில் தள்ளி விழுத்தப்பட்டனர் எனினும் பொலிஸார் அதனை அலட்சியப்படுத்தி நிகழ்வில் கலந்துகொண்டவர்களை பின்னோக்கி தள்ளினர்.


இதனை தொடர்ந்து கறுப்புஜூலைஏற்பாடுசெய்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

இதன்பின்னர்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலை காணப்படும் பகுதிக்குச் சென்று அங்கு சுட்டி விளக்குகளை ஏற்றும் முயற்சியில் ஈடுபட்டனர் அதனை அங்கு காணப்பட்ட சிறிய கும்பல் ஒன்று கடுமையாக எதிர்த்தது. இதைத்தொடர்ந்துபொலிஸார் காலால் சுட்டிகளை மிதித்து உடைத்து அழித்தனர்.


கறுப்புஜூலைநிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மீண்டும் விளக்குகளை ஏற்றியவேளை பொலிஸார் அவர்களை கடுமையாக அச்சுறுத்தி அங்கிருந்து அகற்றினர்..

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)









மாணவர்கள் ஊழியர்கள் எனபலரும்கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## அழுத்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுமாறும், இந்தியாவின் பாதுகாப்பு என்பது இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியுடன்பின்னிப்பிணைந்தது என்பதையும் வலியுறுத்தியிருந்தனர். ஆகவேஇந்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு தரப்பு என்றஅடிப்படையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு முழுமையான தார்மீக உரிமை இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எமது கடிதத்தில்தெரிவித்திருந்ததைப் போன்றே இந்தியப் பிரதமர் மோடி அவர்களும் இலங்கை ஜனாதிபதிக்கு மேற்கண்ட விடயங்களைத் தெளிவாக எடுத்துரைத்திருந்தது மாத்திரமல்லாமல், இலங்கை தமிழ் மக்கள் மரியாதையுடனும் கண்ணியமாகவும் வாழ்வதற்கு அவர்களது அபிலாஷைகள்முழுமையாக நிறைவுசெய்யப்படவேண்டும் என்றும் அதற்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளதுடன்அதனை இலங்கை அரசு செய்யும் எனத்தாம்எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார். அத்துடன், இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையின் பாதுகாப்பு என்பவை ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததுஎன்றும் இந்து மகா சமுத்திரத்தின் பாதுகாப்பிற்கும் அது முக்கியமானது என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு இந்திய அரசு தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அபிவிருத்தி மற்றும் அதற்கான உதவிகள் என்பவைகூட, இலங்கை தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் இந்தியப் பாதுகாப்புடன் ஒருமித்துப் போகின்ற ஒரு விடயம் என்பதை ஈபிஆர்எல்எவ் கருதுவதைப் போன்றேஇந்தியப்பிரதமரும் கருதியிருப்பதையிட்டு நாம் எமது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் இந்தியப்பிரதமருக்குத்தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 36 வருடங்கள் கடந்துள்ள இன்றைய நிலையிலும் அதில் அடங்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்குஅழுத்தம்கொடுக்க வேண்டிய நிலையிலேயே இந்தியா இருக்கிறது என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகிறோம்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதாக டெல்லியில் ஒப்புக்கொண்டாலும் மாறி மாறிஅதிகாரத்தைப்பிடிக்கும் இலங்கைஆட்சிகள்அதனை இழுத்தடித்து வருவதையே நாங்கள் பல காலமாகப் பார்த்துவருகிறோம். பல்வேறு காரணங்களைக்கூறிஅதை நடைமுறைப்படுத்துவதிலிருந்துதப்பித்துவருவதையும் பார்த்திருக்கின்றோம். இந்த முறையும் அவ்வாறில்லாமல், அதுமுழுமையாகநடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு இந்தியா ஒரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்என்பதுடன், குறிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் இவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று இலங்கை ஆட்சியாளர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.

மலையக தமிழ் மக்கள் இந்த மண்ணில் குடியேறி 200வருடங்கள்முடிவடையும் இன்றைய காலகட்டத்தில் சரியான ஊதியமில்லாமல், வாழ்விடங்களில்லாமல் இன்னமும் லயன்களில் அடிமைகளாக வாழ்கின்ற சூழ்நிலையில் அவர்களுடைய அபிவிருத்திக்காக இந்தியஅரசு 75 கோடிஇந்திய ரூபாய்களை வழங்குவது வரவேற்பிற்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும். மலையக மக்கள் கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் இந்தியா தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இலங்கை ஜனாதிபதியும் தமிழ் மக்களுக்கும் இந்திய அரசுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை காலம் கடத்தாது முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம் -என்றுள்ளது.

# வீடு புகுந்து வாள்வெட்டு பெற்றோல் ஊற்றி எரிப்பு

## வவுனியாவில் வெறிச் செயல்; இளம் பெண் சாவு





வவுனியா மாவட்டம், தோணிக்கல் என்ற இடத்தில் உள்ள வீடு ஒன்றிற்குள் நேற்று நள்ளிரவு அத்து மீறி நுழைந்த கும்பல் ஒன்று வாள்களால் வெட்டி நடத்திய அட்டூழியத்தில் இளம் பெண் உயிரிழந்தார். சிறுவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நள்ளிரவு 12.45 மணியளவில் அடையாளம் தெரியாத குழு ஒன்று வீட்டிற்குள் புகுந்து வாள்களால் வெட்டியதுடன், வீட்டிற்கும் தீ வைத்துள்ளதுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 119 அவசரச் சட்டத்தின் ஊடாக கிடைத்த செய்தியின் அடிப்படையில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை தொடங்கியுள்ளனர்.

வவுனியா பொலிஸாரும், வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினரும் மற்றும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை அணைத்துள்ளனர்.

எனினும் வாள்வெட்டு மற்றும் தீ காயங்களுக்கு உள்ளாகிய இளம் பெண் பாத்திமான உயிரிழந்தார். காயமடைந்த பத்து பேர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவனை தேடிச் சென்ற குழுவே இந்தத் தாக்குதல் நடத்தியுள்ளது.

முகத்தை மூடிக்கட்டிக் கொண்டு திடீரென உள்நுழைந்த கும்பல், அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டியதுடன், அனைவர் மீதும் பெற்றோல் ஊற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

'எங்கே சுகந்தன்' என தேடியபடியே அந்த கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவத்தின்போது வீட்டு மாடியில் இருந்த சுகந்தன் கீழே இறங்கி வந்தபோது, கும்பல் அவரை வெட்ட முயன்றது. கணவனைக் காப்பாற்ற குறுக்கே சென்ற மனைவியான இளம்பெண் சரமாரியான வெட்டுக் காயங்களிற்கு உள்ளானார்.

பின்னர் அவர்கள் மீது பெற்றோல் ஊற்றி தீ மூட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கணவனும் வெட்டுக் காயங்களுக்கும் எரி காயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்.

2 வயதுடைய சிறுவன் மற்றும் 7, 8 ,13 ஆகிய வயதுடைய மூன்று சிறுமிகள், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட நான்கு பெண்கள், 42 வயதுடைய ஆண் மற்றும் 36 வயதுடைய ஒருவர் எனப் பலர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

காயமடைந்த நபர்களுக்கு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் சிலரிடம் விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தடவியல்பொலிஸார்மற்றும்குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ம.கோகுல்சங்கர் மற்றும் பதில் நீதிபதி ஆர்த்திகா தயாபரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை நடத்தினர். (100)

# தரமற்ற மருந்துப் பயன்பாடு குறித்த விசாரணை ஆரம்பம்

தரமற்ற மருந்துகளை பயன்படுத்தியமைதொடர்பில் விசாரணைகளைத்தொடங்க கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி விக்ரமரத்னவின் கூற்றுப்படி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம்மற்றும்சுகாதார அமைச்சு மீதான தேசிய கணக்காய்வு அலுவலகம் நடத்திய விசாரணையில் தரமற்றமற்றும்பதிவுசெய்யப்படாதமருந்துகளின்பயன்பாடு குறித்தஏராளமானதகவல்கள் தெரியவந்துள்ளன.

நாடாளுமன்றத்தின் பொதுஅலுவல்கள்குழுவிலும் இதுவிவாதிக்கப்பட்டதாகதிரு. விக்கிரமரத்ன தெரிவித்தார்.

தரமற்றமருந்துபொருள் பாவனை தொடர்பான தகவல்கள் தொடர்ச்சியாக பல்வேறுபகுதிகளில் இருந்து பதிவாகி வருவதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்றதகவல்களின் அடிப்படையில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான கணினி அமைப்பு தொடர்பில் விசேட விசாரணைகள் ஏற்கனவேதொடங்கப்பட்டுள்ளதாகவும்கணக்காய்வாளர்நாயகம் குறிப்பிட் டுள்ளார்.

அது நிறைவடையும் தருவாயில் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## குடத்தனை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



இதன்போதுதுப்பாக்கிகள் மற்றும்மகசின்கள்உள்ளிட்ட ஆயுதங்கள்வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பிரமிட் திட்டத்தை நடத்தியவரின் சொகுசு கார் பணம் வைப்பிலிட்டவர்களால் தீ வைத்து எரிப்பு!

பிரமிட்திட்டத்தில் ஈடுபடுவதாகக்கூறப்படும்நபருக்குச் சொந்தமான சொகுசு காரொன்று, சிலரால்தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாகஹுங்கம பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவம்ஹுங்கம பிரதேசத்தின் ரன்ன, ஹெரோதர மாவத்தையில் உள்ள அவரது வீட்டின் முன்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் பிரமிட் திட்டத்தில் பணம் வைப்புச்செய்துள்ளதாகவும், இருப்பினும் அதற்கான கொடுப்பனவோ பணமோ குறித்த நபரால் மீள வழங்காமை காரணமாக ஆத்திரமடைந்தவர்கள் காருக்குத்தீவைத்திருக்கலாம் என சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தீயால் கார் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில்ஹுங்கமபொலிஸ் நிலையத்தில் காரின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தங்காலை பிரிவுக்கு உட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் ஹுங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)



# நானுஓயாவில் லொறி குடைசாய்ந்து விபத்து

## இருவர் காயம்

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈஸ்டல் பகுதியில் ரதல்ல குறுக்கு வீதியில் வெள்ளிக்கிழமை இரவு லொறியொன்று வீதியில் குடைசாய்ந்து விபத்திற்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது லொறியில் நால்வர்பயணித்தநிலையில் இருவர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மிகவும் செங்குத்தான இவ்வீதியில் சிறிய வளைவு ஒன்றில் லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து தேயிலை மலையில் குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது. குறித்த வீதியில் இதற்கு முன்னரும் பலவிபத்துக்கள் ஏற்பட்டதை கருத்தில் கொண்டு இவ்வீதி செங்குத்தானசரிவுகளையும் பாரிய வளைவுகளையும் கொண்டுள்ளதால், தகுந்த தடையாளிகளை பாவித்து வாகனங்களை செலுத்த வேண்டும்எனபலஅறிவிப்பு பலகைகளும் இவ்வீதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ள போதிலும் ஒருசில கனரக வாகனங்கள் இவ்வீதியால் பயணிப்பதும் குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# ஆண் ஒருவரின் சடலம் மஸ்கெலியாவில் மீட்பு!

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள காட்டு மஸ்கெலியா தோட்டத்தைச் சேர்ந்த தேயிலை தொழிற் சாலை அருகில் உள்ள வடிகால் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

காட்டு மஸ்கெலியா தோட்டத்தைச் சேர்ந்த 52 வயதுடைய மூன்று குழந்தைகளின்தந்தையான வெளிக்கள உத்தியோகத்தர் செமுவேல் வின்சென்ட் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தை ஹற்றன் நீதிமன்ற நீதிவான் வந்து பார்வையிட்ட பின்னர், கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுச்செல்லப்பட்டு அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலதிக விசாரணை களை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# 3 அரியவகை கருங்குரங்குகள் காப்பகத்தில் இருந்து திருட்டு

அத்திடிய வனவிலங்கு காப்பகத்தில்இருந்துமூன்று அரியவகை கருங்குரங்குகள் திருடப்பட்டுள்ளன என கல்கிசை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அத்திடிய வனவிலங்கு காப்பகத்தின் பாதுகாப்பு அதிகாரிபொலிஸில்முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மூன்று கருங்குரங்குகளும் வெள்ளிக்கிழமை காலை திருடப்பட்டுள்ளன என குறித்த வனவிலங்கு காப்பகத்தின் பாதுகாப்பு அதிகாரி செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லையென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# யாழ் - கொழும்பு இடையே சொகுசு தொடருந்து சேவை

## ஓகஸ்ட் 1 முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிற்கு இடையில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் சொகுசு ரயில் ஒன்றை சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகரயில்வேதிணைக்களம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் இரவு 10 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படும் இந்த ரயில் காலை 06மணிக்குயாழ்ப்பாணத்தை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் யாழ்ப்பாணத் தில் இருந்தும் நாள்தோறும் இரவு 10 மணிக்கு கொழும்பு நோக்கி ரயில் சேவை இடம்பெறும் என்றும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த ரயில் சேவைக்கான கட்டணம் 4 ஆயிரம் ரூபா என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

(05)

# மலையக மக்களின் கல்வி, சுகாதார விருத்திக்கு ரூ. 300 கோடி ஒதுக்கீடு

## மோடி வழங்கினார் என்று அமைச்சர் ஜீவன் தகவல்

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி வழங்கவுள்ள 300 கோடி ரூபா கல்வி மற்றும் சுகாதாரத்துறை அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். இதில் மலையகத்துக்கான பல்கலைக்கழக திட்டமும் உள்ளடங்கும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இரு நாள்கள் இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு வெள்ளிக்கிழமை இரவுநாடுதிரும்பிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், கொழும்பு - கட்டுநாயக்க விமானநிலையத்தில்வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தியா சென்றிருந்தோம். மலையக மக்களின் பிரச்சினைகள், அரசமைப்பின் 13 ஆவதுதிருத்தச்சட்டம், எரிசக்தி மற்றும் மின்சக்தி துறைக்கான முதலீடுகள் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டன. இவை தொடர்பில் சாதகமானபதில்கள்கிடைத்துள்ளன.

இதில் குறிப்பாக மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசும்போது, வீடுகளை நிர்மாணிப்பதால் மாத்திரம் பிரச்சினை தீராது, வீடுகள் அமைக்கப்பட்ட பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தை - வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். அதற்கு கல்வியே சிறந்த தேர்வாக அமையும் என சுட்டிக்காட்டியிருந்தேன்.

மலையக பெருந்தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்காக 300 கோடி ரூபா வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி,



சுகாதாரத் துறைக்கு அந்நிதி பயன்படுத்தப்படும்.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான அரச அங்கீகாரத்துடனான தேசிய விழா நவம்பரில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறப்பு தூதுவர் பங்கேற்பார் என எதிர்பார்க்கின்றேன்.

அதேவேளை, எதிர்வரும் 26 ஆம் திகதி சர்வக்கட்சி கூட்டத்தை ஜனாதிபதி கூட்டியுள்ளார். இதன்போது 13 தொடர்பான ஆவணம் முன்வைக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். ஆக மொத்தத்தில் இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. - என்றார். (05)

# 13ஆவது திருத்தத்தை மீறும் உரிமை ஜனாதிபதி ரணிலுக்குக் கிடையாது

## இப்படிச் சொல்கிறார் செல்வம் எம்.பி.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் சட்ட ரீதியாக அரசமைப்பில் உள்ள ஒரு விசேட திருத்தம். இந்த அரசியல் சாசனத்தை மீற ஜனாதிபதிக்குக்கூட தார்மீக உரிமை இல்லை.

13 ஆவது அரசமைப்பு திருத்த விடயத்தில் இந்தியாதொடர்புபட்டுள்ளதுஎன்ற அடிப்படையில்அதுதொடர்பில் இந்தியா இலங்கைக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும் என வலியுறுத்துகிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வங்கித் தொழில் விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவைவருமாறு-

இந்தியாவுக்கு செல்ல முன்னர் எம்மை அழைத்துபேசியஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை தரமுடியாது என்று கூறினார்.



அவருக்கு ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகின்றோம். நாங்கள் கோரும் தீர்வு சமஷ்டி அடிப்படையிலானது. அதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் சட்ட ரீதியாக அரசமைப்பில் உள்ள ஒரு விசேட திருத்தம். இந்த அரசியல் சாசனத்தை மீற ஜனாதிபதிக்குக்கூடத்தார்மீக உரிமை இல்லை.

13 ஆவது அரசமைப்பு திருத்த விடயத்தில் இந்தியா தொடர்புப்பட்டுள்ளது என்ற அடிப்படையிலேயே அது தொடர்பில் ஓர் அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க வேண்டுமென நாம் கோரி வருகின்றோம்.

இலங்கை அரசு உட்பட இலங்கை ஜனாதிபதி இந்த அரசியல் சாசனத்தை மீறுகின்ற பாதக செயலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

சட்டத்தை மீறுகின்ற தலைவர்களாக இவர்கள் இருக்கின்ற நிலையில் ஏனைய சாதாரண மக்கள் சட்டத்தை எப்படிமதிப்பார்கள் எனக் குறிப்பிட்டார். (05)

# பல்கலை மாணவர்களைத் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கின்றமை எதற்கு?

## வாசுதேவ கேள்வி

பகிடிவதைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகமாணவர்களைத் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில்விளக்கமளிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில்,

'இந்நாட்டின் அரசியல் மாற்றமொன்றுநிகழவேண்டும் என்று வலியுறுத்தி, பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக பேரணிகளை நடத்தினார்கள்.

இந்த நிலையில், களனி பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர், மற்றும் செயற்பாட்டாளர் ஆகியோர் 200 நாட்களாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

பகிடிவதைச் சட்டத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த சம்பவமானது பகிடிவதையுடன் தொடர்புடையது அல்ல என்றுபல்கலைக்கழகநிர்வாக சபையே தெரிவித்துள்ளது.

மேலும், இது மாணவர் ஒன்றியவிவகாரம்தொடர்பாக



இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகஅறிக்கை வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த மாணவர்களைப் பகிடிவதை சட்டத்தின் கீழ் கைது செய்து தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைத்துள்ளார்கள்.

இவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுடனும், பாதாள குழு உறுப்பினர்களுடனும்தான் சிறையில் உள்ளார்கள்.

இவர்களுக்கு ஏன் இன்னமும் பிணை வழங்கப்படாமல் உள்ளது? - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் இருவருக்கு அச்சுறுத்தல்

## பொலிஸார் மிக மோசமாக நடந்தனர் எனக் குற்றச்சாட்டு

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்களான லவன் மற்றும் மதன் ஆகியோரை பொலன்நறுவைப் பகுதியில் வைத்து பொலிஸார் அச்சுறுத்தி மோசமாக நடந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் திருகோணமலையில் இருந்து புதன்கிழமை இரவு சுவிஸ் தூதரகத்தின் அழைப்பின் பேரில் கொழும்பு நோக்கி பயணித்த வேளையில் பொலன்நறுவை, ஹபரன பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் நின்ற போக்குவரத்துப்பொலிஸார் மனித உரிமை செயற்பாட்டாளர்களது உடைமைகளை சோதனை செய்தனர் எனவும் - அதன் பின்னர் தாம் சுவிஸ் தூதரகத்தின் அழைப்பின்பேரில்செல்வதாகத் தெரிய வந்த பின்னர் தம்மை மிக மோசமாக நடத்தியதுடன் உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் திருகோணமலை மாவட்ட பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு பணிப்பாளருக்கு தெரியப்படுத்திய பின்னரே பொலிஸார் அவர்களைவிடுவித்தனர் எனவும் வடக்குகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது செயற்பாட்டாளர் லவன் ஜூலை 18 பயங்கரவாத தடுப்பு பிரிவினரால்மூன்றுமணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் வடக்குகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை

கறுப்பு ஜூலை என்று வர்ணிக்கப்படும் தமிழர்கள் மீது அரச ஆதரவுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரங்களின் 40ஆவது நினைவுநாள் நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வைக் குழப்புவதில் காவல்துறையினரும் வேறு சிலரும் குறியாக இருந்துள்ளனர். கறுப்பு –ஜூலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களளும் பொது அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் காவல்துறையினரின் நடவடிக்கைகள், நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் சக்திகளுக்குத் துணை நிற்கும் வகையில் அமைந்திருந்ததே தவிர, நியாயமாக நினைவேந்தல் செய்வோருக்கு பாதுகாப்பு வழங்கி நிகழ்வு நடக்க ஒத்துழைப்பு வழங்கியிருக்கவேண்டிய காவல்துறையினர் அதற்கு மாறாக நினைவேந்தலைக் குழப்பியதுடன், நினைவேந்தப்பட்டுக் கொளுத்தப்பட்ட சிட்டிகளைக் கால்களால் மிதித்து உடைத்து அழித்து அட்டூழியம் புரிந்துள்ளமை மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை நிகழ்வாகவே அமைந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் ஆதரவாளர்களும் நினைவேந்துதற்குரிய உரிமை முற்றிலுமாக மறுக்கப்பட்டிருக்கின்றது.

1983 கலவரத்தின் போதும் இதுபோன்றே காவல்துறையினர் கலவரத்தைத் திட்டமிட்டு மேற்கொண்டவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அவர்களைக் கட்டுப்படுத்தத் தவறியது. இப்போதும் அதே தவறையே அது செய்கின்றது..

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இலங்கைத் தரைபடையினர் பயணித்த வாகனம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்தக் கலவரங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. அவர்களின் சடலங்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு, கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன. இதற்கு அரசு முழு ஆதரவு வழங்கியது.

கலவரங்களின் பின்னர் வெளிநாட்டுச் செய்தியாளரிடம் பேசிய அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெவர்த்தன, தமிழர்களைப் பட்டிபோட்டுச் சாகடித்தால் சிங்களவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்ற தெரிவித்திருந்தார்.

24 மாலை இறுதிக் கிரியைகளுக்காகப் பெருமெடுப்பில் திரட்டப்பட்டிருந்த பௌத்த சிங்களவர்கள் அன்று இரவே தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தைத் தொடங்கினர். இதற்கு திட்டமிட்ட வகையில் இலங்கையின் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் ஆதரவும் அனுசரணையும் வழங்கினார்கள். அதே கட்சியின் தற்போதைய தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே இன்று அரசுத் தலைவராகப் பதவியில் அமர்ந்திருக்கின்றார்.

தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் கொழும்பில்தான் தொடங்கின என்றாலும் விரைவிலேயே நாடு முழுவதும் பரவின. தமிழர்களின் வீடுகள், கடைகள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன. கலவரக்காரர்களின் கைகளில் வாக்காளர்கள் பட்டியல் இருந்தது. அவற்றின் அடிப்படையில் அவர்கள் தமிழர்களின் வீடுகளைத் தேடித் தேடி தாக்கினார்கள். பெரும்பாலான நகரங்களில் இருந்த தமிழர்களின் பெரு வர்த்தகங்கள், கடைகள் கலவரத்தின் பெயரால் தாக்கிச் சூறையாடப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை மீண்டெழவே இல்லை.

7 நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற கலவரங்களில் தமிழர்கள் உயிருடன் கொழுத்தப்பட்டார்கள். நிர்வாணமாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்கள், அடித்துக் கொல்லப்பட்டார்கள், கொள்ளையடிக்கப்பட்டார்கள், கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் இருந்த வடக்கு கிழக்கை நோக்கி விரட்டப்பட்டார்கள். இவை அனைத்தையும் இலங்கை காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர். கலவரக்காரர்களைத் தடுத்து நிறுத்த அவர்கள் எந்தவித நடவடிக்கைகளையும்எடுக்கவில்லை. சிறைகளில்அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 பேர் சிறைக்குள்ளேயே அடித்துக் கொல்லப்பட்டனர்.

இந்தக் கலவரங்களில் அப்பாவித் தமிழர்கள் 3 ஆயிரம் பேர் வரையிலானோர் கொல்லப்பட்டனர் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆனால் அரசினால் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு இதுவரையில் இல்லை. மனித உரிமைகளுக்கான தமிழர் நிலையத்தின் கணிப்பீட்டின்படி 5 ஆயிரத்து 638 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒன்றரை லட்சம் மக்கள் வீடுகளை, இருப்பிடங்களை இழந்து அகதிகளானார்கள். அவர்களைத் தற்காலிகத் தங்குமிடங்களில் வைத்த ஆட்சியாளர்கள் கப்பலில் வடக்கு கிழக்குக்கு ஏற்றி அனுப்பினார்கள்.

தமிழர்களின் 8 ஆயிரம் வீடுகள் 5 ஆயிரம் கடைகள் அழித்து நாசமாக்கப்பட்டன, கொள்ளையிடப்பட்டன, எரித்து அழிக்கப்பட்டன. இதனால்ஏற்பட்ட சொத்து அழிவுகள் மட்டும் 300 மில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆனால் இதற்கும் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் எவையும் இல்லை.

பன்னாட்டுநீதித்துறைவல்லுநர்கள்ஆணைக்குழுஎன்கிறஅமைப்பு 1983 விடுத்த தனது அறிக்கையில் இது ஒரு இனப்படுகொலை என்று தெரிவித்திருந்தது.

40 வருடம் கழித்து இந்தப் பெருந்துயரை நினைவேந்த முடியாத நிலைமைதான் இலங்கையில் இருக்கின்றது என்பது எவ்வளவு பெரிய கொடுமை. அதிலும் நினைவேந்தலில் ஈடுபட்டவர்களைக் குழப்பும் பேரினவாதிகளுக்கு ஆதரவாகவே இன்றும் காவல்துறையினர் செயற்படுவதென்பது அதைவிடவும் மோசமானது.

நினைவேந்தல் உரிமை எல்லோருக்கும் உரியது என்று தொடர்ந்து பேசும் அரசுத் தலைவர் ரணிலின் ஆட்சியிலேயே அவர் இருக்கும் தலைநகரில் தமிழர்களை நினைவு கூர்வதற்கு உரிமை மறுக்கப்படுகின்றது என்பதுயும் அவனத்தில் கொள்ளவேண்டும். இதுபோன்ற மோசமான செயல்களும் கொள்கைகளுமே இந்த நாடு உருப்படாமல் சென்றதற்குக் காரணங்கள்.

# உக்ரேனிய வலிந்த தாக்குதல் தோல்வி அமெ. கொத்துக் குண்டுகள் பதிலீடா ?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



அண்மையவாரங்களில்உக்ரேனிய படைகளின்வலிந்ததாக்குதல்கள்பெரும ளவில் தோல்வியைச் சந்தித்துள்ளன. போர்க்களத்தில் இந்தப் பின்னடைவு களை மாற்ற அமெரிக்கா அதிக பாதிப் புள்ள அழிவு ஆயுதங்களை வரம்பு முறையின்றி வழங்க பெரும் பிரயத்தனத்துடன் முயன்று வருகிறது.

### தொடர் பின்னடைவு

கடந்த ஒரு மாதமாக உக்ரேனிய போர் நிலவரத்தில், மேற்குலக படைபல ஆதரவுடன் உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் ரஷ்யாவால் முறியடிக்கப்பட்டுள்ளதை மேற்குலக ஊடகங்களும் உறுதிப்படுத்தி உள்ளன.

உக்ரேனின்வலிந்தஎதிர்த்தாக்குதல் முயற்சியின்போது ரஷ்யப் படைகளின் முறியடிப்புத்தாக்குதல்களால்பல உக்ரேனிய தாங்கிகள் அழிக்கப்பட்டதைக் காட்டும் வீடியோப் பதிவுகள் மேற்கத்திய ஊடகங்களிலும் வெளியாகி உள்ளன.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக வீடியோவை முழுமையாக ஆதாரப்படுத்தி ஏற்காவிட்டாலும், ஜூன் முதல் வாரத்திலேயே உக்ரேனின் 186 டாங்கிகள், 418 கவச வாகனங்கள் இழக்கப்பட்டதை கீவ் தலைநகரம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

உக்ரேனின்தொடர்பின்னடைவால் அமெரிக்க பைடென் நிர்வாகம் முன்பை விட அதிக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.



கிளஸ்டர் எனப்படும் கொத்துக் குண்டுகளை (சிறு குண்டுகளைப் பரவலாக சிதறிவிடும் கொத்துக் குண்டுகளை) பயன்படுத்தும் முடிவு எடுக்கப்பட்டதற்கான நோக்கம், முடிந்த வரை பல ரஷ்ய சிப்பாய்களைக் கொல்ல வேண்டும் என்பதே ஆகும்.

இதற்கு முன்பே 2003ஆம் ஆண்டு ஈராக் மீதான படையெடுப்பின்போது அமெரிக்க கொத்து குண்டுகளைகடைசியாகபெரியஅளவில் பயன்படுத்தியது. அதற்கு முன்பாக 2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பின்போது அமெரிக்கப் படைகள் அவற்றை ஒரு முக்கிய ஆயுதமாகக் கருதியதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டனம் தெரிவித்து உள்ளது.

### ஆப்கான் - ஈராக் போரில் அமெரிக்க கொத்து குண்டுகள்

ஆப்கானிஸ்தான் சண்டையின் முதல் மூன்று ஆண்டுகளில், அமெரிக்க தலைமையிலான கூட்டணி, ஆப்கானிஸ்தானில் 1,500க்கும் மேற்பட்ட கிளஸ்டர் குண்டுகளை வீசியதாக மதிப்பிடப்பட்டு உள்ளதாக பென்டகன் தெரிவித்து உள்ளது.

இதேவேளை 2009ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிப் போரிலும், கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக, அப்போது செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.




தற்போது ரஷ்ய படையினர் மற்றும் அவர்களின் டாங்கிகள் தொடர்ந்து முன்னேறி உக்ரேனிய நிலப்பரப்பைக் கைப்பற்றி வருகின்றன. இதன் காரணமாக, பொதுமக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளதால், அமெரிக்கா இந்த கடின முடிவை, தாங்கள் எடுத்ததாக தெரிவித்து உள்ளது.

தற்போது, உக்ரைன் நாட்டின் கைவசம் வெடிமருந்துகள் எதுவும் இல்லை என்றும், எல்லைப்பகுதிகளில் முன்னேறி வரும் ரஷ்ய நாட்டின் பீரங்கி டாங்குகளை, தற்காலிகமாக நிறுத்துவதற்கு, உக்ரைனிற்கு, இந்த கிளஸ்டர் குண்டுகள் துணைபுரியும் என்று, சிஎன்என் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்டு உள்ளார்.

### நேட்டோ தீவிரமாக எதிர்ப்பு

நேட்டோவில் அங்கம் வகிக்கும் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்பு உள்ள நிலையில், இத்தகைய கொடூர ஆயுதங்களை, ஏன் உக்ரைனுக்கு வழங்க வேண்டும் என்ற கேள்வியை அமெரிக்கா எதிர்கொள்ளவேண்டிய சூழல் உருவாகி உள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கூற்றுப்படி, உக்ரைனுக்கான விநியோகத்திற்கு 3% க்கும் குறைவான விகிதத்தில், பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் வெடிக்காத குண்டுகள் குறைவாகவே இருக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

கிளஸ்டர் குண்டுகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் ஒரு மாநாட்டில் 120 க்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன, அவை ஆயுதங்களைப் பயன்படுத்தவோ, உற்பத்தி செய்யவோ, மாற்றவோ அல்லது சேமித்து வைக்கவோ மற்றும் அவற்றைப் பயன்படுத்திய பிறகு அவற்றை அழிக்கவோ ஒப்புக் கொண்டன. இதில் கையெழுத்திடாதவர்களில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகியவை அடங்கும் என்பது குறிப் பிடத்தக்கது.

கிளஸ்டர் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தி வேறெந்த நாட்டையும் விட அதிக மக்களைக் கொன்றுள்ள அமெரிக்கா, அந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.

### ரஷ்யாவிற்கு எதிரான நேரடிப் போரா?

உக்ரைனுக்குகிளஸ்டர்குண்டுகளை வழங்கும் அமெரிக்காவின் செயலானது ரஷ்யாவிற்கு எதிரான நேரடிப்போர் அறைகூவலாக கருதப்பட இடமுண்டு.

உக்ரைனுக்குஅமெரிக்காவழங்கும் பீரங்கிகளால் வெடிக்கத்தக்க வகையிலான இந்த ஆபத்தான வெடிமருந்துகளால், அதிக அளவிலான ரஷ்ய இலக்குகளைத் தாக்க இயலும்.

வாஷிங்டன் நிர்வாகத்தால் உக்ரைனுக்கு கிளஸ்டர் வெடிமருந்துகளை வழங்குவது குறித்த கடினமான முடிவை, சர்ச்சைக்குரிய வெடிகுண்டுகளை கவனமாகப் பயன்படுத்துவதாக உக்ரைன் உறுதியளித்ததை தொடர்ந்தே எடுத்ததாக, அமெரிக்கஅதிபர்ஜோபைடன்தெரிவித்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கிளஸ்டர் போன்ற வெடிமருந்துகளின் பயன்பாடு உடனடியாக நிறுத்தப்படவேண்டும், எந்த இடத்திலும் பயன்படுத்தப்படக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதி மார்டா ஹூர்டாடோ தெரிவித்து உள்ளார்.

பொது மக்கள் வசிக்கும் நகர்ப்புறங்களில் வெடிமருந்துகளைப் பயன்படுத்த மாட்டோம் என்று, உக்ரேன் எழுத்துப்பூர்வமாக உத்தரவாதம் அளித்துள்ளதைதொடர்ந்து, இந்த வெடிமருந்துகள் வழங்கப்பட உள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டு உள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கூறியதாவது , டட்ரேட் எனப்படும் வீரியம் குறைக்கப்பட்ட வெடிமருந்துகளையே அமெரிக்கா, உக்ரைனுக்கு அனுப்ப உள்ளது.ஆனால், எத்தனைஎண்ணிக்கையில் இத்தகையவெடிமருந்துகள் வழங்குவது குறித்த தகவல் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

### வியட்நாம் போரில் அமெரிக்க அட்டூழியம்

வியட்நாம் போரின் போது, கம்போடியா, லாவோஸ் மற்றும் வி யட்நாமில் அமெரிக்கா சுமார் 413,130 தொன் கிளஸ்டர் கொத்துக் குண்டுகளை வீசியது. இந்த பரவலாக சிதறிய சிறுகுண்டுகளில் பல வெடிக்கவில்லை. அவை தொடர்ந்து அப்பாவி மக்களுக்குகுறிப்பிடத்தக்கஅச்சுறுத்தலை முன்நிறுத்துவதுடன், அந்தப் போர் முடிந்து பல தசாப்தங்களுக்குப் பின்னரும் எண்ணற்ற காயங்களுக்கும் இறப்புகளுக்கும் வழி வகுத்துள்ளன.

இதனைப் போலவே 2003 இல் அமெரிக்கா தலைமையிலான ஈராக் படையெடுப்பின்போது, பொது மக்கள் வாழும் பகுதிகளைத் தாக்குவதற்கு அமெரிக்கா வழக்கமாக இந்த கிளஸ்டர் குண்டுகளைப் பயன்படுத்தியது. இதை சர்வதேச பொது மன்னிப்பு சபை ஒரு கண்மூடித்தனமான தாக்குதல் மற்றும் ஒரு கடுமையான சர்வதேச மனிதாபிமான சட்டமீறல், என்று குறிப்பிட்டது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் பயன்படுத்திய இந்த கிளஸ்டர் கொத்துக் குண்டுகளால் பொது மக்களுக்கு ஏற்பட்ட அழிவார்ந்த பாதிப்புகளைக் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் 2008 அறிக்கை ஒன்று பின்வருமாறு விவரிக்கிறது: லாவோஸ் மற்றும் வியட்நாமில் கிளஸ்டர் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டு மூன்று தசாப்தங்களுக்குப் பின்னரும், அவை தொடர்ந்து மரணங்களையும் காயங்களையும் ஏற்படுத்தி வருவதுடன், சாதாரண மக்களின் பொருளாதார செயல்பாடுகளைத் தொந்தரவுக்கு உள்ளாக்கி வருகின்றன. மற்றும் அங்கே வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதைத் தடுத்து வருகின்றன.

லெபனானில், 2006 மோதலுக்குப் பின்னர் உடனடியாக சுத்திகரிப்பு தொடங்கிய போதினும், மக்கள் அவர்களின் வீடுகளுக்கும் வசிப்பிடங்களுக்கும் திரும்பிய போது அவர்களிடையே உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுத்து விட முடியவில்லை.

கொசோவோவில், இன்னமும்கூட கிளஸ்டர்கொத்துக்குண்டுகளால்அப்பாவி மக்கள் உயிரிழப்பதைக் குறித்த செய்திகள் வருகின்றன.

கொசோவோ மற்றும் லெபனானில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களைப் போன்ற, மிக விரைவான பெரியளவிலான சுத்திகரிப்பு முயற்சிகள் கூட, கிளஸ்டர் கொத்துக் குண்டு மாசுபாட்டால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க முடியவில்லை.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# புலிகள் அமைப்பின் கொள்கையுடையவர் ரெலிகொம் நிறுவனத்தை கைப்பற்றுவார்

## நாலக கொடஹேவா ஆரூடம்

ரெலிகொம் நிறுவனத்தின்100சதவீதபங்குகளையும் விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கையுடையவர் கைப்பற்றுவார்.

ரெலிகொம்நிறுவனத்தை தனியார் மயப்படுத்து-வது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர சமர்ப்பித்த அறிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளதுஎன சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில்இடம்பெற்றஊடகவி-யலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரசநிறுவனங்களைமறுசீரமைக்க அதாவது தனியார் மயப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

நட்டமடையும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் பணிகள் மந்தகதியில் உள்ளன. ஆனால் இலாபமடையும் ரெலிகொம் நிறுவனம், லங்கா வைத்தியசாலை, லிற்றோ நிறுவனம் ஆகியவற்றை தனியார் மயப்படுத்த அரசாங்கம் துரிதகரமாக செயற்படுகிறது.

ரெலிகொம் நிறுவனத்தின் 50 சதவீத பங்குகள் அரசாங்கத்திடமும், 49 சதவீத பங்குகள் தனியார் வசமும் காணப்படுகின்றன. அரசாங்கத்திடம் உள்ள 50 சதவீத பங்குகளையும் தனியார் மயப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

ரெலிகொம் நிறுவனத்தின் 100 சதவீத பங்குகளையும் விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கையுடையவர் கைப்பற்றுவார்.

ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என தேசிய



பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர அறிக்கை சமர்ப்பித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கை பொய் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டு உண்மையை மறைத்து விட்டது. நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களின் செயற்பாடுகளை பலவீனப்படுத்தும் வகையில் அரசாங்கம்செயற்படுகிறது. -என்றார். (05)



# பொலிஸ் மா அதிபர் கிளிநொச்சிக்கு வருகை

இலங்கைபொலிஸ்மாஅதிபர்சனிக்கிழமைகிளிநொச்சிக்கு வருகை தந்தார்..

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன மற்றும் வடமாகாண மூத்த பொலிஸ் மா அதிபர், வடமாகாணத்திலுள்ள 61 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, வடமாகாணத்தில்உள்ளபாதுகாப்புநிலைமைகள் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (05)

# சிக்கியது விபச்சார விடுதி பணிக்குச் செல்வோரும் கைது

பம்பலப்பிட்டி பகுதியில் இயங்கிவந்த விபச்சார விடுதியொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், அதன் உரிமையாளரையும் பல பெண்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் இரு அலுவலக ஊழியர்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள அலுவலகங்களிலும் பணிபுரியும் நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தமது கடமைகளை முடித்துக்கொண்டு இந்த இடத்திற்கு வந்து விபச்சாரத்தில் ஈடுபட்டு மேலதிக வருமானம் ஈட்டி வந்தனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பாதுகாப்பின்றி யானைகளை கொண்டு வருவதற்குத் தடை

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கு யானைகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அண்மைக்காலமாகயாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்களின் போது வேறு மாவட்டங்களில் இருந்து யானைகள் வரவழைக்கப்பட்டு அவற்றை எந்த விதமான பாதுகாப்பு நடைமுறைகளும் இன்றி ஆலய சடங்குகளிலும் மற்றும் ஊர்வலங்களிலும் ஈடுபடுத்துகின்றனர்.

இதன்போது உரிய பாதுகாப்பு நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இவ்வாறு யானைகளை பயன்படுத்தவது சட்டவிரோதமானதும் பொதுமக்களுக்கு எதிர்பாராதவிதமான ஆபத்துகளை விளைவிக்கக் கூடியதுமாகும் என



அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இவ்வாறு யானைகளைப் பயன்படுத்தவதற்கான அனுமதி வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் யானைகளை கையாள்வதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதற்கான ஆளணி ஆகியவை பேராதனை கால்நடை வைத்திய பீடத்தில் மட்டுமே உள்ளதுடன் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் தொழில் பரப்பினுள் அவற்றுக்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாறு உரிய அனுமதி பெறப்படாமலும், உரிய பாதுகாப்பு நடைமுறை களை பின்பற்றாது யானைகளை உற்சவங்களில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஆலய நிர்வாகத்தினர் மற்றும் உற்சவங்களை நடத்துவோரை கேட்டுக்கொள்வதாக அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் அறிவிப்பினை விடுத்துள்ளார். (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

## இலங்கையில்

# சகல வசதிகளுடன்கூடிய யானை வைத்தியசாலை

### கவனம் செலுத்துகிறது தாய்லாந்து

இலங்கைக்கு சகல வசதிகளுடன் கூடிய யானை வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்து வழங்குவது தொடர்பில் தாய்லாந்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

யானைகளுக்குஎக்ஸ்ரே, ஸ்கேன் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு மருத்துவ வசதிகளுடன் கூடிய யானை வைத்தியசாலையைவழங்க முயற்சித்து வருவதாக இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹார்ன்போல் தெரிவித்திருந்தார்.

யானைகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும், யானைகளுக்கு வைத்தியசாலை நிர்மாணத்துக்குத் தேவையான ஏற்பாடுகள் போன்றவை தொடர்பாக ஆராய்வதற்காக தாய்லாந்தின் சிறப்புக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

மேலும், முத்துராஜா யானைக்கு உரிய சிகிச்சை அளிக்காததால் மீண்டும் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், இலங்கையில் உரிய சிகிச்சை அளித்திருந்தால் முத்துராஜாவை இலங்கையிலேயே வைத்திருந்திருக்கலாம் என்றும் அவர் கூறினார். (05)

# 266 மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு!

நாட்டில் மேலும் 266 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

850 வகையான மருந்துகளில்இந்த266மருந்துகளும் பற்றாக்குறையாக உள்ளனஎனசுகாதாரஅமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் மருந்துப் பாவனை அதிகரித்துள்ளதாக அவர் மேலும்தெரிவித்துள்ளார். (05)

# தடுப்பூசி போட்ட குழந்தைகளுக்குகூட அம்மை நோய் தாக்கும் அபாய நிலை

தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளுக்குகூடஅம்மை நோய்தாக்கும்அபாயம்உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ நிலைமைகள் அல்லது போசாக்கு குறைபாடுகள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறையும் குழந்தைகளுக்கு அம்மை நோய் தாக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பிரதி மருத்துவப் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். 2019ஆம் ஆண்டிற்குப்பிறகு, அம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கைகருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பொலிஸாராக நடித்துக் கொள்ளை பொக்குனுவிட்டவில் 10 பேர் கைது!



பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று நடித்து பணம் மற்றும் சொத்துக்களைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில்பொக்குனுவிட்ட பிரதேசத்தில் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மில்லனிய, கஹதுடுவ, அங்குருவத்தோட்ட, பாதுக்க, கொஸ்கம, இங்கிரிய, கிரிந்திவெல மற்றும் பண்டாரகம ஆகிய இடங்களில் சந்தேக நபர்கள் இந்த கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம், கடந்த 18 ஆம் திகதி ஹொரண பொக்குனுவிட பிரதேசத்தில் 10 கிராம் ஹெரோயினுடன் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே ஏனையவர்களும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஜனாதிபதி மேல் நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம்

### ஈபிஆர்எல்எப். இரா.துரைரட்ணம் தெரிவிப்பு

சிறுபான்மை மக்களுக்கான நல்ல தீர்வை எட்டப்படும்நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் மேல் நம்பிக்கை வைத்துள்ளதாக முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் சிரேஸ்ட தலைவருமான இரா.துரைரெட்னம் தெரிவித்தார்.

கையில் உள்ளவற்றை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் செல்ல மாட்டார்கள்.

தமிழர் தாயப் பகுதியின் அதிகாரப்பகிர்வு தொடர்பில் இழுத்தடிப்புசெய்யும்அரசியல் கட்சிகள் அவற்றை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டு. ஊடக அமையத்தில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த வேண்டுகோளை அவர் முன்வைத்துள்ளார்.

மேலும் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சாதகமான சூழ்நிலைகள்உருவாகிவரும் நிலையில் சில தமிழ்க் கட்சிகள்அதனைஏற்றுக்கொள்ளவில்லை,

நிராகரிக்கின்றோம்என்று சொல்வது அவர்களுக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் நீண்டகாலமாக வடக்கு, கிழக்கில் இது தொடர்பில் பேச்சுகளில் ஈடுபடுபவர்களுக்கும் மக்களுக்கும் ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்தார். (05)






# லொறியை மோதியது ரயில் சாரதி உட்பட இருவர் காயம்



வவுனியா - திருநாவற்குளம் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற தொடருந்து விபத்தில்லொறிசாரதிஉட்படஇருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில்இருந்து கொழும்புநோக்கிபயணித்துக் கொண்டிருந்த கடுகதி தொடருந்து, வவுனியா - திருநாவற்குளம் 3ஆம் ஒழுங்கை பகுதியில்வைத்து, புகையிரத கடவையை கடக்க முயன்ற லொறி மீது மோதியது. இந்த விபத்தில்லொறியில்பயணித்த சாரதியும் மற்றொருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரையும் பொதுமக்கள் மீட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

இவ்விபத்தில் தாண்டிக்குளம் பகுதியை சேர்ந்த இருவரே காயமடைந்தனர் எனபொலிஸார்தெரிவித்தனர்.

# வட்டியைக் குறைக்க மத்திய வங்கி உத்தரவு



உரிமம்பெற்றஅனைத்து வங்கிகளுக்கும் இலங்கை மத்தியவங்கிவிசேடஅறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொள்கைவட்டிவிகிதங்ள் குறைக்கப்பட்டதற்கு ஏற்ப அனைத்துகடன்வட்டிவிகிதங்களையும் குறைக்க உடனடி நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் என்று அது கூறுகிறது.

கடன் வட்டி விகி தங்கள் போதியளவு குறைக் கப்படாவிட்டாலோ அல்லது தாமதம் ஏற்பட்டாலோ இது தொடர்பில் மத்திய வங்கி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கும் என மத்திய வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# இரு குழுக்கள் இடையே இரத்தினபுரியில் மோதல்

## ஒருவர் சாவு; இருவர் காயம்

இரத்தினபுரி, ஹிந்தெல்ல பகுதியில்இருகுழுவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த மோதலில் இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளனர்.

ஹிந்தெல்லபிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய நபரே மோதலின்போது உயிரிழந்தவர் எனவும் காயமடைந்தவர்கள் 36 மற்றும்37வயதுடையஉயிரிழந்தவரின் மகன்மார்கள் எனவும்பொலிஸார்தெரிவித்தனர். நீண்டகாலமாக இந்த குழுவினர்களுக்கிடையில் ஏற்பட்ட நிலத்தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இக்குற்றச்சம்பவத்துடன் தொடர்புடைய 18, 65 வயதுடைய இரண்டுபெண் சந்தேக நபர்கள் மற்றும் 48 வயதுடைய ஒரு ஆண் சந்தேகநபர் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைதுசெய்வதற்கானமேலதிக விசாரணைகளைஇரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீனவர்கள் குறித்து இந்த ஆட்சிக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



மீன்பிடித் துறை ஊடாக நாம் பெற்றுக்கொள்ளும் வருமானம் நாட்டின் தேசிய உற்பத்தில் 1.4 சதவீதமாகும். இது மிகவும் கவலைக்குரியது. இந்த ஆட்சிக்கு மீனவர்கள் தொடர்பில் எந்தவித அக்க றையும் கிடையாது.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக தொடங்குதூவ மீன்பிடி துறைமுகத்துக்கு சென்றிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடலின் 200 மைல் தொலைவிலுள்ளபொருளாதார வலயஉரிமையைஎமதுநாடு பெற்றிருந்தாலும், சர்வதேச சட்டத்துக்கு அமைவாக மீன்பிடித் துறையில் நாம் பெற்றுக் கொள்ளும் பங்களிப்பு 1.4 வீதம் என்றால் அது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

உண்மையில் இந்த ஆட்சிக்கு மீனவர்கள் தொடர்பில் எந்தவித அக்கறையும் கிடையாது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்பு நீர்கொழும்பிலிருந்து பாணந்துறை வரையிலான கடல்பகுதி மாத்திரமே என கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளமை பெரும் பிரச்சினையாகும். கடந்த காலங்களில் புத்தளம் கடற்பரப்பு வரையிலும் அந்தக் கப்பலில் காணப்பட்ட திரவங்கள் வந்தன. எனவே கடற்றொழில் அமைச்சின் தலையை முதலில் சரி செய்ய வேண்டும் - என்றார்.

# நீர்கொழும்புத் துறைமுகம் அருகே பெண்ணின் சடலம்

நீர்கொழும்பு மீன்பிடி துறைமுகத்துக்கு அண்மையில் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் நேற்றுக் காலை 10.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டது..

சடலம் கண்டுபிடிக்கப்பட்டபோது மூக்கின் வழியாக குருதி கசிந்து கொண்டிருந்ததாகவும் பெண்ணின் உயரம் 5 அடி என்றும் பொலிஸார் தெரிவித் தனர். பெண் கொலை செய்யப்பட்டிருக் கலாம் எனவும் பொலிஸார் சந்தே கிக்கின்றனர். சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2023இல் வெளியிடப்பெற்றது.